மே 29, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய், இப்போது, முதலில், (ஓர் ஆத்மா) உன்னை ஓர் உடலற்ற ஆத்மாவாக கருது. குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் நீங்கள் முதலில் ஆத்மாக்கள் அதன்பிறகு உடல்கள் என்பது உள்ளது. எவ்வாறாயினும், நாடகம் திட்டத்தின் படி, மக்கள் இதை தவறாக புரிந்துக்கொண்டு, தலைகீழாக அவர்களை முதல் உடல்கள் அதன்பின்னர் ஆத்மா என்று நினைக்கின்றார்கள். தந்தை கூறுகிறார்: அவை அழிந்துவிடும்; நீங்கள் ஒன்றை நீக்கி மற்றொன்றை எடுக்கின்றீர்கள். சமஸ்காரங்கள் ஆத்மாவில் உள்ளன. இது புரிந்துக் கொள்ளப்பட வேண்டிய ஓர் மிக சுட்சுமமான அம்சம் ஆகும். ஆத்மாக்கள் மிகவும் சுட்சுமமான அழிவற்றவர்கள். ஓர் ஆத்மாவோ அல்லது அவரது பாகமோ அழிக்கப்பட முடியாது.

இனிமையான பாபா, நாள்பொழுதில் நான் உடலற்றவன் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். நான் ஓர் ஆத்மா, எனக்கு இந்த உடல் இருக்கின்றது. நான் ஓர் உடல், அதற்கு ஓர் ஆத்மா இருக்கிறது என்று இல்லை. எனக்குள் அழிவில்லாத பாகம் பதிவாகி உள்ளது. ஆத்மாவாகிய நானோ அல்லது என்னுடைய பாகமோ அழிக்கப்பட முடியாது.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் உங்கள் எண்ணங்களை கூட சரிபார்த்து வீணானவற்றின் உங்கள் கணக்குகளை முடிக்கும் மேன்மையான சேவையாளராக ஆகுவீர்களாக.

நான் உலக மேடையில் செயல்படும் போது ஒரு சக்திவாய்ந்த மனோபாவத்தை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். முழு உலகமும் என்னை பார்த்துக் கொண்டிருக்கின்றது நான் செய்வதையே செய்கின்றது. எனவே, நான் ஓர் எண்ணத்தை கூட வீணாக்கக்கூடாது. நான் ஓர் எண்ணத்தை வீணாக்கினால், அதை நான் எனக்காக மட்டும் வீணாக்கவில்லை ஆனால் ஒரு கருவியாக, நான் மற்றவர்களுக்காகவும் அதை வீணாக்கினேன். எனவே, நான் உலக மேடையில் செயல்படும் ஒரு சக்தி வாய்ந்த மனோபாவத்தை மேற்கொள்கின்றேன். நான் விணானவற்றை முடித்துவிடுகின்றேன். ஓர் மேன்மையான சேவையாளராக ஆகுவேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: தந்தை உன்னை அழுக்கிலிருந்து நீக்குவதற்கு வருகிறார். மனிதர்கள் புதைமணலில் சிக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதனால் அவர்களை அதிலிருந்து விடுவிப்பது கடினம். நீங்கள் அவர்களை பாதி அளவிற்கு அல்லது முக்கால் அளவிற்கு நீக்கிவிட்டால் கூட, அவர்கள் கை விட்டுவிட்டு மீண்டும் விழ்ந்து விடுகிறார்கள். நாடகத்தின் படி, அஃது அவர்களின் தவறில்லை. மாயா அவர்களின் புத்தியை முற்றிலும் தரம் தாழ்ந்ததாக ஆக்கிவிடுகின்றது

இன்று என்னுடைய திருஷ்டியில், மற்றவர்கள் எவ்வளவு தாழ்ந்துவிட்டார்கள் என்பதை தெளிவாக பார்க்கக் கூடியதாக இருந்தாலும், அனைவரையும் நான் ஆறுதல் அளித்து உதவ வேண்டிய ஓர்த் தூய ஆத்மா என பார்க்கின்றேன். அவர்களின் மேன்மையான சுயத்தை பார்ப்பதன் மூலம், என்னால் அவர்களுடைய உண்மையான வாழ்க்கைக்கு அவர்களை மீண்டும் உயர்த்த முடிகின்றது. நான் அவர்களின் தவறான அடையாளத்தில் பார்த்தால், நான் அந்த தவறை வலுப்படுத்துகின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.